RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

# தமிழ் (சதகம்) இலக்கியங்களில் உணவு

**ஆ. அரிதாஸ் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, ஆர்.கே.எம். விவேகானந்தா கல்லூரி, சென்னை-600004, தமிழ்நாடு, இந்தியா

# Food in Tamil (Satagam) Literature

**A. Haridas [a, *]**

[a] Department of Tamil, RKM Vivekanadha college, Chennai-600004, Tamil Nadu, India

* Corresponding Author:
aridoss29@gmail.com

Received: 11-04-2024
Revised: 22-06-2024
Accepted: 30-06-2024
Published: 01-08-2024

Check for updates

**ABSTRACT**

Food in Tamil literature refers to water and what is grown on land by water. Food, when used in measure, becomes a treat for the energetic and a medicine for the sick. The word Soru has been associated with Tamil since the Sangam period till today. The five types of land indicate that business is for food and food is life. The elevation of food (prasadam) can be experienced in worship. Sataka says that the best of virtues is feeding the poor. The purpose of this article is to say that the necessity of human sacrifice (giving), true gift, Vallal Kumanan who is hungry, the one who lives by giving charity to the people, etc. will be praised as God, and today's youth are forced to pay special attention to food.

**Keywords:** Food, Tamil literature, Sangam period, worship

## முன்னுரை

உணவு என்பது திட உணவு, நீருணவு எனப் பகுக்கலாம். உணவு உயிர் வாழ்வதற்கு இன்றியாமையாதது ஆகும். நீரும் நீரால் விளைந்த பொருளும் உணவாகும். இளநீரும் உணவாகும், முற்றியப்பின் தேங்காயும் உணவாகும் ஒரே மரத்தில் விளைந்தாலும் காலத்தால் அதன் பயன் வெவ்வேறாகும். பசி வந்தால் பத்தும் பறக்கும் என்பது பழமொழி. பசியால் மானமும் கல்வியும் கூட இல்லாமல்போகும் என்பர். உணவிற்காகவே தமிழர் வாழ்க்கையை வகுத்தான் என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

## உணவே மருந்து

உணவே ஒருவரின் உடல்வலிமையைத் தீர்மானிக்கிறது. உடல்நிலையே உள்ளத்தின் உறுதியை மேம்படுத்துகிறது. உணவு என்ற சொல் உண், உணா, உணவு என்பனவற்றுள் உண் என்பதே அடிச்சொல்லாக அமைகிறது. அடிச்சொல்லினடிப்படையில் உண்ணப்படுவது அனைத்தும் உணவு எனக்கருதத்தோன்றும். உடல் நலமுள்ளவனுக்கு உணவாகப் பயன்படும் கஞ்சி நோயுற்றவனுக்கு மருந்தாகவும் பயன்படுகிறது எனவே உண்ணப்படுவனவெல்லாம் உணவாகா என்பதை எளிதில் உணரலாம். உயிர் வாழ்வதற்குத் தேவையான ஆற்றலைத் தரும் பொருளை உணவென்று கூறுவர். "புகா என்னும் சொல்லின் பொருள் உணவு புகவுர் என்பதும் புகா என்னும் சொல்லின் திரிபு. புகா என்பதே சரியான சொல், இந்தச் சொல் பிற்காலத்தில் தமிழ் இலக்கியங்களில் வழங்கப்படவில்லை ஆயினும் பேச்சுவழக்கில் இன்றும் வழங்கி வருகிறது. ஆனால் இச்சொல் இப்போது குழந்தைகளைப்

பார்த்து நீ புவ்வா சாப்பிட்டாய என்றும் புவ்வா சாப்பிடு என்றும் கூறுவதை இன்றும் பேச்சு வழக்கில் காணலாம். புவ்வா என்பது புகா என்பதன் திரிபு என்பது நன்கு தெரிகிறது” (பக்.5)என்று விளக்குகிறார் சே. நமசிவாயம்.

## சோறு

சோறு என்னும் தமிழ்ச்சொல் பழங்காலம் முதல் இன்று வரை வழக்கத்திலுள்ள உணவைக் குறிக்கும் ஒரு பொது சொல் ஆகும். பால் கலந்த சோறு பால் சோறு, ஊன் கலந்த சோறு ஊன் சோறு, கொழுப்பு நிணம் கலந்த சோறு கொழுஞ்சோறு, சிவப்பு அரிசி சோறு செஞ்சோறு, நெய் கலந்த சோறு நெய்ச்சோறு, புளிக்குழம்பு கலந்த சோறு புளிச்சோறு, வெறும் சோறு வெண்சோறு என்பர். “சோறு என்பதற்கு அடிசில், அழினி, கூழ், அவிழ், கொன்றி, நிமிரல், புழுங்கல், பொம்மன், மிதவை எனப் பல சொற்கள் இருந்தன. பச்சரிசியால் பொங்கப்பட்ட சோற்றைப் பொங்கல் என்றும் புழுங்கல் அரிசியால் பொங்கப்பட்ட சோற்றை புழுங்கல் என்றும் அழைக்கப்பட்ட வழக்கம் இருந்திருக்கிறது.” (பக்.06) என்கிறார் அ.கா. பெருமாள்

## நீரும் உணவு

உணவெனப் படுவது நிலத்தொடு நீரே (புறம். 18 குடபுலவியனார்) என்பர். நிலத்தில் விளைந்தவையும் நீரையும், நீரில் விளைந்தவையும் உணவாகக் கொள்ளப்படுகிறது. நன்னீரில் விளையும் பொருள் நல்லவையாகவே விளையும் என்பர். நீர் உணவை விளைவிப்பதோடு தானும் உணவாகும் என்பதை வள்ளுவர்

“துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்கு

துப்பாய தூஉம் மழை” (குறள் 12)

என்றுரைக்கிறார்.

## ஐவகை நிலத்தில் உணவு

குறிஞ்சி (மலை) - மலைநெல், மூங்கிலரிசி, தினை

முல்லை(காடு) - வரகு, சாமை, முதிரை

மருதம் (வயல்) - செந்நெல் அரிசி, வெண்ணெல் அரிசி

நெய்தல் (கடல்) - மீனும் உப்பும் விற்றுப்பெற்றப் பொருள்

பாலை (மணல்) - வழியில் பறித்த பொருள், ஊரில் கவர்ந்த பொருள்

அந்தந்த நிலத்தில் பூத்தச் சிறந்த பூக்களின் பெயரே அந்த நிலத்திற்கு பெயராகி வந்துள்ளதைக் காணமுடிகிறது. பூக்கள் கண்களுக்கு விருந்தாகி, மனதிற்கு மகிழ்வாவதோடு மட்டுமல்லாமல் சில பூக்கள் உணவாகவும் பல பூக்கள் மருந்தாகவும் பயன்படுகின்றன. நிலத்திற்கு நிலம், நீரும், உணவும் வேறுபடுகின்றன. ஐவகை நில அமைப்பிலும் பருவத்திற்கும் காலத்திற்கும் ஏற்றார்போல் உணவு மாறுபடுகின்றன. திணை கருப்பொருளில்(14) உணவும் ஒன்றாகி உணவில்லையெனில் உயிரில்லை என்பதை உறுதியாக்குகிறது.

## ஐந்திணை தொழிலிலும் உணவு

ஐந்திணையிலும் செய்யப்பட்ட தொழில்கள் யாவும் உணவுத்தேவைக்காக ஆக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

குறிஞ்சி (மலை) - மலைநெல் விதைத்தல், தினை காத்தல், தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல்.

முல்லை (காடு) - வரகு, சாமை விதைத்தல், களை கட்டல், அரிதல், கடாவிடுதல்(போரடித்தல்) , கால் நடை மேய்த்தல் , ஏறு தழுவுதல்.

மருதம் (வயல்) - வயற்களை கட்டல், நெல்லரிதல், கடாவிடுதல், குளம் குடைதல்.

நெய்தல் (கடல்) - மீன் பிடித்தல், உப்பு விளைத்தல், விற்றுப்பெற்றப் பொருள், மீன் உலர்த்துதல்

பாலை (மணல்) - போர் செய்தல், பகற் சூறையாடல்

ஐவகைநிலத்திலும் உணவு பொருட்டே தொழில் நிகழ்ந்துள்ளதை அறியமுடிகிறது.

## வழிபாட்டில் உணவு

மக்கள் தங்கள் வாழ்க்கையில் பயன்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களை இறைவனுக்குப் படைத்து வழிபட்டுள்ளனர் என்பதை பழந்தமிழ் இலங்கியங்கள் காட்டுகின்றன. வெறியாட்டு நடைபெறும் இடங்களில் நெல்பொரி(குறுந்.53) சிதறிக் கிடந்ததையும், இல்லுறை தெய்வங்களை மாலை பொழுதில் நெல்லும் மலரும் தூவி வழிபட்டதை முல்லைப்பாட்டும் நெடுநல்வாடையும் பறைச்சாற்றுகின்றன. அகநானுறு கொற்றவைக்கு உயிர்பலி(அகம்.166) கொடுத்தலைக் கூறுகிறது. முருகப்பெருமானுக்கு ஆட்டுக்கிடாயின் குறுதியோடு கலந்த தூய வெள்ளரிசியைப் பலியாகக் கொடுத்ததைத் திருமுருகாற்றுப்படையால் அறிகிறோம். நடுகல் வழிபாட்டால் கள்ளையும் செம்மறி ஆட்டையும் பலியாகக் கொடுத்ததையும் காணமுடிகிறது. வெறியாடல், குரவையாடல், புதுநீராடல் போன்ற விழா காலங்களில் ஆடல் நடைபெற்றிருக்கின்றன. தமிழர்களின் விழா என்றாலே உணவில்லாமல் இருக்காது, விழா தொடக்கத்தில் இறைவனை நினைத்து உணவு படைத்து வழிபட்டிருப்பர் என்பது திண்ணம். அறுவடை முடித்து நெல், வீடு நிறைந்தவுடன் உழவர், பொங்கல் விழா கொண்டாடுவர். இவ்விழாவும் உணவினை உயிர்ப்பிக்கும் இயற்கையைப் போற்றும் விழாவாகவே உள்ளது.

## அண்ணாமலை சதக அறத்தில் உணவு

தமிழ் இலக்கியங்களில் தமிழரின் பல்வேறான உணவு முறைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. தமிழ் இலக்கியங்களுள் சிற்றிலக்கியமான சதகமும் ஒன்றாகும். அண்ணாமலை சதகம் சைவ சமயத்தின் சிறப்புகளைக் கூறுகின்றது. சைவசமய நெறிமுறைகளைப் பின்பற்றும் அடியார்களுக்கு இச்சதகம் முப்பத்திரண்டு அறங்களைப் போதிக்கின்றன. அவற்றுள் 12 அறங்கள் உணவைத் தானமாக அளித்தலைப் பகர்கின்றன. கீழ்வுள்ள கருத்துக்களைத் தொண்டை மண்டல சதகமும், அண்ணாமலை சதமும் எடுத்துரைக்கின்றன.

"எண்ணான் கறந்தொண்டை மண்டலம் ( தொண். மண். சத. பா.70)

ஓதுவார்க் குணவீத லாறுசமை யத்துளோர்க்

கோதன மளித்தலவாஞ்

துரிஞ்சிடத் தறிநாட்ட னாடொறும் பசுவினுக்

குவந்துவா யிரைகொடுத்தல்" (அண்ணா. சத.பா.40)

1. ஓதுவார்க்கு உணவு தருதல்
2. அறு சமயத்தோருக்கும் உணவு அளித்தல்

3. பசுவினுக்குப் புல் தருதல்
4. விலங்கிற்கு உணவு அளித்தல்
5. சிறைச்சோறிடல்
6. தின்பண்டம் நல்குதல்
7. ஏழைக்குச் சோறு அளித்திடல்
8. குழந்தைகளுக்கு பால் தருதல்
9. குளம் கல்லுதல்
10. தண்ணீர் பந்தல் வைத்தல்
11. நாள்தோறும் ஐயமிடல்
12. பிறர் உயிர் காத்திடல் (மறைப்பொருள் உணவு)

இவ்வறங்களை நோக்கும் போது உணவளித்தல் என்பது உயிர்க்காக்கும் செய்கையாகும். பிற உயிர்களுக்கு உணவிடுவதால் என்றும் தாழ்ந்து போவதும் இல்லை, செல்வம் குறையப்போவதும் இல்லை, நல்லவைக்காகக் கொடுக்கப்படும் செல்வம் வளருமே தவிர குறைவதில்லை என்பர், தன்னால் முடிந்த உதவியைப் பிறருக்கு செய்து உயர்வோம். மேலும் பதினாறு பேறுகளில் ஒன்று அறு சுவை உணவு ஆகும், ஆகவே நல்வாழ்விற்கு மிகத் தேவையானது உணவே அதனை தான் பயன்படுத்துவதோடு நில்லாமல் பசித்தவருக்குக் கொடுத்தும் வாழ்வது சிறந்த வாழ்வென்பர்.

## ஐந்து வகை வேள்விகளில் உணவு

பாவங்கள் சேராதிருக்க யாகங்கள்(கொடுத்தல்) அவசியமாகின்றன. யாகங்களில் சிறந்த யாகம் விருந்தினருக்கு உணவிடும் மனித யாகமாகும் என்கிறது அண்ணாமலை சதகப் பாடல் (61).

பிரமயாகம் - வேதம் ஓதுதல். பிதுர்யாகம் - தேவரிஷி பித்ரு தர்ப்பணம் செய்தல். தேவயாகம் - தீயில் ஆகுதி வழங்குதல். பூதயாகம் - சிவாகமப்படி பலியிடுதல். மனிதயாகம் - விருந்தினருக்கு உணவிடுதல். மனிதரின் பசியைப் போக்குதலே இறையருளை அடையும் வழி ஆகும் என்பர். அதனால் தான் கோயில்களில் இறைவனுக்குப் படைத்த உணவு பிரசாதமாக வழங்கப்படுகின்றன.

## பெற்றதாய் பசித்திருக்கப் பிராமணபோசனம்

நெருங்கிய உறவினர், தன்னைச் சார்ந்தவர், கல்வி அறிவுடையவர், அந்தணர், ஆதரவற்றோர் இவர்களுக்கு உதவி செய்யாமல், பிறருக்கு செய்யும் உதவிகள்(உணவு) பெற்றதாய் பசித்திருக்கப் பிராமண போசனம் செய்பவர்கள் ஆவர் இது தேவையாயென்று சாடுகிறது தண்டலையார் சதகப்பாடல்(52) மேலும் தாய் போன்ற தன்மையுடையவர்கள் யாவர் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

## உண்மையான கொடை

உண்மையான கொடை என்பது பாரி என்று நினைத்து ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்குவது அல்ல வறுமையுற்ற காலத்தில் சிறிது கொடுத்தாலும் மனம் உவந்து கொடுத்தால் அதுவே உண்மையான கொடையாகும் என்கிறது தண்டலையார் சதகப் பாடல்(48), இக்கருத்தையே வள்ளுவம்,

“காலத்தி னால்செய்த நன்றி சிறிதெனினும்

ஞாலத்தின் மாணப் பெரிது” (குறள் 102)

என்கிறது.

## பசி தீர்த்த குமண வள்ளல்

நாட்டினை தம்பி பெற்றுக்கொள்ள காடு சென்று நலிவுற்ற நாளில், பாட்டிசைத்த புலவன் என்னுடைய வயதான தாய் உணவின்றி வாடுகிறாள், என் மனைவியின் மார்பில் பால் இல்லாததால் என் குழந்தை அழுகிறது, தனக்கும் உணவிற்கு கூட வழியில்லை என்று கூறி குமணனிடம் வேண்டி நிற்க, என்தலை பற்றியறுத்து ஈட்டி என் தம்பியிடம் ஈந்தால் கோடி பொன் வரும் என்று தன்கையிலுள்ள வாளை எடுத்து நீட்டினான். புலவனின் குடும்ப பசியைப் போக்க உணவிற்காகத் தன்னுயிரையும் வழங்க நினைத்த குமண வள்ளலின் சிறப்பு போற்றுதற்குரியது என்கிறது கொங்கு மண்டல சதகப்பாடல்( 41).

## உடல் மேல் காதல்

உடல் மேல் காதல் கொண்டவர் மீதுண்பதைத் தவிர்ப்பார், சுத்தமான, சத்தான உணவினை காலமறிந்து உண்பார். உண்டபின் உலாவுவார், பசியின்றி உண்ணார், உண்டு சிறிது காலத்திற்கு பின்பே நீர் அருந்துவர், காய்ச்சப்பட்ட பால், நீர்மோர், உருக்கிய நெய், வழுக்கை உடைய இளநீர் போன்றவற்றை உண்பார் எனக்கூறுகிறது குமரேச சதகப் பாடல்(19), மேலும் வாழ்வியலுக்குத் தேவையானக் கருத்துகளை முன்வைக்கிறது. அவை,

“மாதம் இருமுறை மாதரைப் புணர்வது

ஆண்டுக்கு இருமுறை வயிற்றைச் சுத்தம் செய்வது

வாரம் இருமுறை எண்ணெய் தேய்த்து குளிப்பது”

அறிவான, அடர்த்தியான கூந்தலை உடைய, தன்னைவிட இளைய பெண்ணுடன் சேர்வது என வாழ்க்கைக்குத் தேவையான சிறந்த வழிகளைக் கூறுகிறது. சிறந்த வாழ்க்கை வாழ மூலாதாரமாக அமைவது உணவும் தூக்கமும் ஆகும். இன்றைய இளைஞர்கள் பணிச்சுமையின் காரணமாகவும் சூழ்நிலை காரணமாகவும் சரிவிகித உணவையும் உறக்கத்தையும் துளைத்து, வாழ்வளிக்கும் உயிர் அணுக்களையும் துளைத்துவருகின்றனர். இவர்கள் மிக உயர்ந்த நாகரிக உடையுடன் நலிவடைந்த உடலுடன் நிற்பது பின்னாளில் மனித இனத்திற்கே பேராபத்தைக்கொண்டு வரவும் கூடும். ஆகவே, இயற்கை உணவினை உண்போம் மனித இன ஆற்றலைக் காப்போம்.

## மக்கள் தொண்டே மகேசன் தொண்டு

ஆகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம், என நான்கு வகைப்படும். இவற்றுள் கிரியை என்பது எல்லோர்க்கும் எப்போதும் தொண்டு செய்து வாழ்வது. தொண்டு என்பது ஒருவருக்கு ஒரு பொருளைக் கொடுத்து பின்பு வேறு பொருளை எதிர்பார்ப்பது அல்ல, மொழி, இனம், சமயம் என அனைத்தும் கடந்து தெரியாத ஒருவருக்குச் செய்யும் உதவியே தொண்டாகும். இதனை, மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று உரைப்பர். மக்களுக்குச் செய்யும் தொண்டு இறைவனுக்குச் செய்யும் தொண்டாகக் கருதப்படும்.

மனிதன் தன் தேவையைப் பூர்த்தி செய்ய வேட்டையாடினான். வேட்டையாடுவதில் சிறந்தவனாகவும் வீரனாகவும் பலகலைகளில் வல்லவனாக இருப்பின் அவன் பின்னாளில் தலைவனாகின்றான். வேடுவர்களின் தலைவனாக குகன் இராமனுக்கு கங்கையில் வாழும் மீனையும் மலைகளில் எடுக்கப்பட்டத் தேனையும் அன்பின் வெளிப்பாடாய் கொடுத்ததும் உணவேயாகும். பெரிய புராணத்தில் கண்ணப்பர் அவர் சுவைத்த பன்றி இறைச்சியைச் சிவனார்க்குக் படைத்து மகிழ்ந்ததும் உணவே ஆகும். இருவரும் வேட்டுவ இனத்தவர்கள். “ஆரம்பகாலத்தில் மனித சமுகம் வேட்டைச் சமுகமாக இருந்தது. மனிதன் இயற்கையாகக் கிடைத்தவற்றை உண்டு வாழ்ந்தான். உணவிற்காக வேட்டையாடுவது, இயற்கையாகக் கிடைத்தவற்றைத் தேடுவது என்னும் செயல்பாடு மட்டுமே இருந்தது. இந்தக் காரணங்களில் அடிப்படையான உணவு சேகரிப்பு என்பதிலிருந்துதான் மனித

சமுகத்தின் வரலாறு ஆரம்பமாகிறது" என்கிறார் அ.கா. பெருமாள்(பக்.01) இதன்மூலம் முந்நாள்களில் வேட்டையாடுவதன் தேவை உணவுக்காகத்தான் என்பது நன்கு புலனாகின்றது.

## முடிவுரை

உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே என்னும் திருமுலர் வாக்கிற்கிணங்க உடம்பை வளர்க்க, உயிரை காக்க, ஐவகை நிலத்திலும் உணவு சார்ந்த தொழில்களை அன்றைய தமிழர் மேற்கொண்டு சிறந்த வாழ்க்கை வாழ்ந்து உள்ளனர் என்பதை உய்த்துணர முடிகிறது. இன்றைய தமிழர் பணிச்சுமையாலும், பிணிச்சுமையாலும், கால மாற்றத்தாலும், சூழ்நிலை வேறுபாட்டாலும், இளைஞர்கள் குறித்த நேரத்தில் உண்ணாமலும் உறங்காதாலும் கைபேசியில் கவிழ்ந்து கிடப்பதால் மனித இன ஆற்றலை இழக்கக்கூடும். பெரும்பாண்மையான செயற்கை உணவுகள் பொருளாதார நோக்குடனே உருவாக்கப்படுகின்றன. அவற்றை உண்ணும் மக்கள் குறிப்பாகக் குழந்தைகள் கண்ணைக் கவரும் வண்ண உணவுகளால் இளம்வயதிலேயே பல நோய்களுக்கு ஆளாகின்றனர். ஆகவே இயற்கையான முறையில் அந்தந்த பருவத்தில் கிடைக்கும் நீருணவையும் நிலத்தில் கிடைக்கும் நீரால் விளைந்தப் பொருள்களையும் உண்போம். நீடூழி வாழ்வோம்.

## References


கார்மேகக் கவிஞர் (உரை முனைவர் ந. ஆனந்தி) ,கொங்கு மண்டல சதகம், சாரதா பதிப்பகம், சென்னை 600 014. முதற் பதிப்பு 2008.

குருபாததாசன் (உரை டாக்டர் கதிர்முருகு), குமரேச சதகம், சாரதா பதிப்பகம், சென்னை 600 014.முதற் பதிப்பு 2009.

படிக்காசுப் புலவர்,(உரை டாக்டர் கதிர்முருகு), தண்டலையார் சதகம், சாரதா பதிப்பகம், சென்னை 600 014. முதற் பதிப்பு 2009.

படிக்காசுப் புலவர் (உரை கவிஞர் முத்து.இராம்மூர்த்தி), தொண்டலை மண்டல சதகம், சாரதா பதிப்பகம், சென்னை 600 014. முதற் பதிப்பு 2013.

சே. நமசிவாயம், தமிழர் உணவு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 600 113. இரண்டாம் பதிப்பு 2003.

அ.கா. பெருமாள் , உணவுப் பண்பாடு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை 600 098. இரண்டாம் பதிப்பு 2014.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License